


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2026) சென்னையில் நடைபெற்ற எஸ். சிவானந்தம் இ.ஆ,ப, – ஆர்.காவியா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### மணப்பாறை சட்டமன்றத் தொகுதி : கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை

# கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

திருச்சி, பிப்.9–

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6.2.2026 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜமால் முகமது கல்லூரியில் நடை பெற்ற விழாவில் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயி களுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற் கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையின்படி கூட்டுறவு நிறுவ னங்க ளில் 31.1.2021 அன்று நிலுவையில் இருந்த விவசாயிகளின் பயிர்கடன்களும் சுயஉதவிக்குழு கடன்களும், பொது நகைக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதனடிப்படையில் திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் 66,180 விவசாயிகளின் 516.76 கோடி ரூபாய்க்கான பயிர்கடன்க ளும் 4,129 மகளிர் சுய உதவிக்குழுக் களை சேர்ந்த 41,781 மகளிரின் 79.60 கோடி ரூபாய்க்கான மகளிர் சுய உதவிக் குழு கடன்களும், 53,271 பயனாளிக ளுக்கு 176.97 கோடி ரூபாய்க்கான பொது நகைக்கடன்களும் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப் பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நிர்வாக காரணங்களால் 31.1.2021 அன்று நிலுவையில் இருந்த விவசாயிகள் பெற்ற பயிர்கடன்கள் தள்ளுபடி செய்யப்ப டாததால் விவசாயிகள் புதிதாக பயிர்க்க டன் பெற இயலாமல் இருந்து வந்தனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர் களிடம் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படை யில் சிறப்பு அனுமதி பெற்று தற்போது இச்சங்கத்தில் உள்ள 2,116 விவசாயி களின் 13.57 கோடி ரூபாய்க்கான பயிர்க்க டன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 44 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 541 பெண்கள் பெற்ற 86.48 இலட் சம் ரூபாய்க்கான மகளிர் சுயஉதவிக்குழு கடன்களும், 938 நபர்களுக்கு 3.31 கோடி ரூபாய்க்கான பொது நகைக்கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில்துணை முதலமைச்சர் அவர்கள் மணப்பாறை சட்டமன்ற தொகு திக்குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற் கான ஆணைகளை வழங்கினார்.

மேலும் எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா 10.00 லட்சம் ரூபாய்க் கான கடன் இணைப்புகளையும், 2 விவ சாயிகளுக்கு மொத்தம் 1,87,000 ரூபாய்க் கான விவசாய பயிர்கடன் காசோலைக ளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவா கத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல் வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளு மன்ற மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந் தர பாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, எஸ். இனிகோ இருதயராஜ், ப.அப்துல் சமது, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், இளை ஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபி ரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேக நாத ரெட்டி, தமிழ்நாடு ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்ட தலைவர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவ ணன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபா லன், துணை மேயர் திருமதி ஜி.திவ்யா, சைக்கிளிங் விளையாட்டு வீரர் பிரதீப் சங் கரா, பாரா அத்லடிக் வீரர் மணிகண்டன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.


காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி
(இருபாலர் பயிலும் கல்லூரி)
வேளச்சேரி–தாம்பரம் மெயின் ரோடு, மேடவாக்கம், சென்னை–600 100

பொன்விழா கொண்டாட்டம்
‘நிறைவு விழா’
கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அரங்கம்,
கல்லூரி வளாகம், மேடவாக்கம்.
09.02.2026, காலை 10.00 மணி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
சிறப்புரை

தலைமை
ஜனாப் எம். ஜி. தாவூத் மியாகான்
செயலர் மற்றும் தாளாளர்

முன்னிலை
ஜனாப் எ. முஹம்மத் அலி
தலைவர், CREDAI சென்னை.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
South India Shelter Pvt., Ltd.,

ஜனாப் சிராஜுதீன்
தலைவர், ராயல் கிங்ஸ் குரூப், சிங்கப்பூர்.

முனைவர் சே. சாதிக்
முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம் புரவலர்,
காயிதே மில்லத் கல்லூரி, மேடவாக்கம், சென்னை.

வாழ்த்துரை
திரு. கோவி. செழியன்
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்

திரு. மா. சுப்ரமணியன்
மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்

நீதியரசர் கே. என். பாஷா
முன்னாள் நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம்

ஜனாப் எ. முஹம்மத் அஷ்ரப்
தலைவர், OMEIAT

தங்களின் நல்வருகையை எதிர்நோக்கும்
காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை
சென்னை–600017
Mail: quaidemillethtrust@gmail.com, Website: www.qmcmen.com





பட்டுக்கோட்டை
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி
(தகைசால் பள்ளி)
நூற்றாண்டு விழா

நூற்றாண்டு மலர் வெளியிட்டு,
விழாப்பேருரையாற்ற வருகை தரும்
மாண்புமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி
பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்களையும்

நூற்றாண்டு நுழைவு வாயில் திறந்து வைத்து,
வாழ்த்துரை வழங்க வருகை தரும்
மாண்புமிகு. கோவி.செழியன்
உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களையும்

நூற்றாண்டு நினைவுத்தூண் திறந்து வைத்து,
வாழ்த்துரை வழங்க வருகை தரும்
திருமிகு. ச.முரசொலி
தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களையும்

வருக! வருக!! வருக !!! என
பள்ளி நூற்றாண்டு குழுவின் சார்பில்
வரவேற்கிறேன்...



நாள்: 09.02.2026, திங்கட்கிழமை
நேரம்: மாலை 4 மணி
இடம்: பள்ளி வளாகம்

அன்புடன்:-
கா.அண்ணாதுரை B.Sc.,B.L.,
பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்
தஞ்சை தெற்கு மாவட்டம்